[9th February 1959

Prizes to Harijan students

***130 *Q.*—Sri P. G. MANICKAM:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956, 1957, 1958-ல் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற ஹரிஜன மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு வருஷமும், எத்தனை பேர்களுக்கு எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள என்னென்ன பரிசுகள் வழங்கப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No amount was allotted for the year 1956–57 and 1957–58. During the current year a sum of Rs. 1,560 has been sanctioned towards the award of medals to the Harijan students who came out successful in the 1957 S.S.L.C. Examination in each district.

(*b*) No prizes have been given so far.

SRI P. G. MANICKAM: எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பைத் தவிர மேல் வகுப்பு பரீட்சையிலும் தேர்ச்சி பெறுகிற மாணவர்களுக்குப் பரிசு கொடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படி இல்லை.

Veterinary Colleges

9-20 a.m. ***131 *Q.*—Sri A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எத்தனை கால்நடை மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன ?

(ஆ) இவற்றில் ஆண்டுதோறும் படிக்கும் மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்கள் எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ? எத்தனை பேர் ?

(ஈ) ஆண்டுதோறும் நம் மாநிலத்தில் கால்நடை மருத்துவரின் தேவை என்ன ? அதில் பற்றுக்குறை ஏதேனும் உண்டா ?

(உ) அப்படியானால், அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One college in Madras City.

(*b*) The number of students admitted to the B.V.Sc. Course every year is 120.

(*c*) Madras	77
Andhra Pradesh	23
Mysore	5
Kerala	2
Jammu and Kashmir	4
Foreign students nominated by the Government of India	6
Demobilised personnel, etc.	3
Total ...	120

9th February 1959]

(d) Average annual requirements about 110
Estimated deficit per year 30

(e) Total admissions to the B.V.Sc. Course were increased from 80—100 during the academic year 1955–56 and again from 100 to 120 from 1956–57 onwards. The Government of India have also been addressed to dereserve the 23 seats allotted to Andhra Pradesh as they have since got increased facilities in their State itself and their final reply is awaited.

SRI A. VEDARATHNAM : நம்முடைய மாநிலத்தில் கால்நடை மருத்துவர்களுடைய பற்றுக்குறை மிகமிக அதிகமாக இருப்பதனால் பல ஆஸ்பத்திரிகளைத் திறந்தும் அங்கே இன்னும் டாக்டர்களை நியமிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அதிகமான பேர்களுக்கு கால்நடை வைத்தியப் பயிற்சியை அளிக்க அக் காலேஜில் ஷிப்டு முறையை அனுசரிக்க இந்த அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப்பற்றுக் குறையை நீக்க வேண்டுமென்று தான் வெடர்னரி காலேஜில் சேர்ந்து படிக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஷிப்டு முறையை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம். அதற்கு லாபரடிரி வசதி வேண்டும்.

SRI V. SUBBIAH : போஸ்ட் க்ராஜ்வேட் மாணவர்களுக்கு நம் ராஜ்யத்தில் எவ்வளவு ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறது ?

MR. SPEAKER : அடுத்த கேள்வி போஸ்ட் க்ராஜ்வேட்டைப் பற்றியது. இந்த உபகேள்வியை அதில் போடுங்கள்.

SRI M. R. KANDASWAMY MUDALIYAR : போதுமான கால் நடை வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் அங்கே உள்ள ஆடு மாடு கள் நஷ்டம் அடைகின்றன. ஆகையால் ஷிப்டு முறையை வெடர்னரி காலேஜில் அனுசரிப்பதானது கொஞ்சம் அனுகூலமாக இருக்கும் என்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை ஏற்படுத்த முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே கனம் வேத ரத்தினம் அவர்களுடைய கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதாவது ஷிப்டு முறையை ஏற்படுத்துவது அசௌகரியமானது, சாத்திய மில்லை என்று சொன்னேன்.

SRI V. R. RAMASWAMY MUDALIYAR : I understand that both in the Kerala and Mysore States, they have started Colleges. If it is a fact, will the Hon. Minister kindly address the Government of India and see that no seats are allotted to those States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Afer all, we allot very iew seats for those States. I shall, however, look into the question.

Veterinary Colleges

* 132 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கால்நடை கல்லூரியில் உயர்தரக் கல்லூரி வகுப்பு (Post-Graduate) எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) இந்த வகுப்பில் எந்தெந்த மாநிலத்தவர் எத்தனை பேர் படிக்கிறார்கள் ?

(இ) கால்நடை மருத்துவக் கல்லூரியை விஸ்தரிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்குண்டா ? அப்படியாயின் அதன் விபரமென்ன ?